KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.46

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

கடி என்னும் உரிச்சொல்: இலக்கண மற்றும் இலக்கியப் பயன்பாட்டு ஆய்வு

The Adjective 'Kadi': A Study of Its Grammatical and Literary Usage

Dr. K. Sankara Narayanan[1,*]

[1] Assistant Professor & Head (i/c), Sangappalagai for Tamil Development
University of Madras, Chennai – 600 005
***Corresponding author:** Dr. K. Sankara Narayanan, vmaxveera@gmail.com
ORCID iD: Dr. K. Sankara Narayanan https://orcid.org/0000-0002-6260-8164

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026

Article ID
KIJTS-2026-0027

Peer review
Double-blind peer review

Keywords
Kadi
Adjective
Tholkappiyam
Nannool
Purapporul Venpamalai
Sangam Literature
Pattuppattu
Etthuthokai

ABSTRACT

Adjectives with multiple meanings hold a distinctive place in the Tamil grammatical and literary tradition. Among them, 'kadi' is a polysemous adjective that conveys various meanings depending on the context in which it occurs. This study identifies and examines the occurrences of the adjective 'kadi' in the grammatical and literary works Tolkappiyam, Nannool, Puraporul Venpamalai, Ettuthokai, Pattuppattu. Its various meanings, contexts of usage, and semantic extensions are analysed on the basis of literary evidence. The study also explores the grammatical background and literary distribution of 'kadi', thereby highlighting its distinctive place in the lexical richness of the Tamil language.

How to cite this article: Dr. K. Sankara Narayanan (2026). கடி என்னும் உரிச்சொல்: இலக்கண மற்றும் இலக்கியப் பயன்பாட்டு ஆய்வு. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 559–569. https://doi.org/10.63300/kijts603112026.46
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் கி.சங்கர நாராயணன்

உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (பொ.)

தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை, சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை – 600 005

krksankaraatamil@gmail.com 9500760777, 9080007010

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கண–இலக்கிய மரபில் பலபொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் தனிச்சிறப்புடையன. அவற்றுள் ‘கடி’ என்னும் உரிச்சொல், சூழலுக்கேற்ப பல்வேறு பொருள்களை உணர்த்தும் பன்முகத் தன்மை வாய்ந்ததாகும். இவ்வாய்வு, தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய இலக்கண மற்றும் இலக்கிய நூல்களில் இடம்பெறும் ‘கடி’ என்னும் உரிச்சொல்லை இனங்கண்டு ஆராய்கிறது. இச்சொல் பெறும் பல்வேறு பொருள்கள், பயன்பாட்டு நிலைகள் மற்றும் பொருள்விரிவுகள் இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் எடுத்துரைக்கப்படுகின்றன. மேலும், ‘கடி’யின் இலக்கணப் பின்னணி மற்றும் இலக்கியப் பரவல் ஆராயப்பட்டு, தமிழ்ச் சொல்வளத்தில் அதன் தனித்துவமான இடம் வெளிப்படுத்தப்படுகிறது.

முன்னுரை

தமிழ்மொழியின் சொல்வளம் அதன் தொன்மை, தொடர்ச்சி, பொருள்வளம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் சிறப்புமிக்க கூறாக விளங்குகிறது. குறிப்பாகச் சொற்கள் தத்தம் இயல்பான பொருளை மட்டுமன்றி, அவை இடம்பெறும் சூழலுக்கேற்ப பல்வேறு பொருள்நிலைகளையும் உணர்த்தும் தன்மை உடையன. இத்தகைய பலபொருள் உணர்த்தும் சொற்களில் உரிச்சொற்கள் தனிச்சிறப்புடையன. ஒரு பொருளின் பண்பு, தன்மை, அளவு, நிலை, உணர்வு ஆகியவற்றை நுட்பமாக வெளிப்படுத்தும் உரிச்சொற்கள், தமிழின் இலக்கண மற்றும் இலக்கிய மரபில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன.

உரிச்சொற்களின் இயல்பையும் பயன்பாட்டையும் முறையாக எடுத்துரைக்கும் தொன்மையான இலக்கண நூலாகத் தொல்காப்பியம் விளங்குகிறது. தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தில் இடம்பெறும் உரியியல், உரிச்சொற்களின் தன்மை, அவற்றின் பொருள்விரிவு மற்றும் சூழல்சார் பயன்பாடு ஆகியவற்றை விளக்குகிறது. இவ்வகையில், ‘கடி’ என்னும் சொல் ஒரே ஒரு பொருளை மட்டும் உணர்த்தாமல், அது இடம்பெறும் சூழலுக்கேற்ப பல்வேறு பொருள்களைத் தரும் பன்முகப் பொருளுடைய உரிச்சொல்லாகத் திகழ்கிறது. இதன் பொருள்விரிவு தமிழின் பழந்தமிழ் இலக்கண மற்றும் இலக்கிய மரபில் சிறப்பாகக் காணப்படுகிறது.

தமிழ் இலக்கண மரபில் உரிச்சொற்களின் பயன்பாடு தொல்காப்பியத்தோடு மட்டுப்படாமல், பிற்கால இலக்கண நூல்களிலும் விரிவடைந்து காணப்படுகிறது. அவற்றுள் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடத்தக்கது. புறப்பொருள் சார்ந்த இலக்கணக் கூறுகளையும், அவற்றுடன் தொடர்புடைய சொற்பயன்பாடுகளையும் எடுத்துரைக்கும் இந்நூல், பழந்தமிழ்ச் சொற்களின் பொருள் மற்றும் பயன்பாட்டு மரபை அறிந்துகொள்வதற்கான முக்கிய ஆதாரமாக விளங்குகிறது.

அதேபோல், சங்ககாலத் தமிழின் செழுமையான சொல்வளத்தை நேரடியாக வெளிப்படுத்தும் இலக்கியங்களாகப் பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகை ஆகிய

சங்க இலக்கியத் தொகுப்புகள் விளங்குகின்றன. இந்நூல்களில் இடம்பெறும் கடி என்னும் சொல் பல்வேறு சூழல்களில் பல்வேறு பொருள்நிலைகளை உணர்த்துகிறது. குறிப்பாக, ஒரு பொருளின் கூர்மை, மிகுதி, சிறப்பு, மணம், புதுமை, அச்சம், காவல் போன்ற பண்புகளைச் சுட்டும் வகையில் கடி பயன்பட்டிருப்பதை இலக்கியச் சான்றுகளின் வழி அறிய முடிகிறது. இதன் மூலம், 'கடி' என்பது ஒரு குறிப்பிட்ட பொருளில் நிலைபெற்ற சொல் அல்ல; சூழலுக்கு ஏற்ப பொருள் விரிவையும் பொருள் மாற்றத்தையும் பெறும் தனித்துவமான உரிச்சொல் என்பது புலனாகிறது.

இந்நிலையில், கடி என்னும் உரிச்சொல்லின் இலக்கணப் பின்னணி, பொருள்விரிவு, பயன்பாட்டு நிலை மற்றும் இலக்கியப் பரவல் ஆகியவற்றை ஆராய்வது அவசியமாகிறது. இவ்வாய்வு, முதற்கண் தொல்காப்பியத்தில் கடி தொடர்பாகக் கூறப்படும் இலக்கணக் கருத்துகளையும் பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்களில் இடம்பெறும் கடி என்னும் சொல்லின் சான்றுகளைத் தொகுத்து, அவை உணர்த்தும் பொருள்களைச் சூழலடிப்படையில் இனங்காண்கிறது.

எனவே, இவ்வாய்வின் நோக்கம் 'கடி' என்னும் உரிச்சொல்லின் இலக்கண மரபையும், இலக்கியப் பயன்பாட்டையும் ஒருங்கிணைத்து ஆராய்வதாகும். தொல்காப்பியம் முதல் சங்க இலக்கியங்கள் வரையிலான பல்வேறு ஆதாரங்களின் வழியாகக் கடி என்னும் சொல்லின் பொருள்நிலைகளை இனங்கண்டு, அதன் பயன்பாட்டுப் பரப்பையும் பொருள்வளத்தையும் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாக அமைகிறது. இதன் மூலம், தமிழில் உரிச்சொற்கள் வகிக்கும் முக்கியத்துவமும், அவை மொழியின் பொருள்வளத்தை விரிவுபடுத்தும் விதமும் தெளிவுபடுத்தப்படுகின்றன.

இனித் தொல்காப்பியம் முதலான இலக்கண நூற்கள் மற்றும் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள கடி என்ற உரிச்சொல்லின் வருகை முறையினைக் காண்போமாக.

தொல்காப்பியம்

தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரத்தில் கடி என்ற உரிச்சொல்லின் வருகையினைக் காணமுடிகின்றது.

கடி நிலை இன்றே வல்லெழுத்து மிகுதி (எழுத்து.உயிர்.83:2), **கடி** நிலை இன்றே ஆசிரியர்க்க (எழுத்து.புள்ளி.94:3), **கடி** நிலை இலவே பொருள்-வயினான (சொல்.வேற்.மயங்.12:2), திணை மயக்குறுதலும் **கடி** நிலை இலவே (பொருள்.அகம்.12:1), மிக்கோன் ஆயினும் **கடி** வரை இன்றே (பொருள்.களவு:2:4), தடுமாறு உவமம் **கடி** வரை இன்றே (பொருள்.உவம:35:1), அடி இகந்து வரினும் **கடி** வரை இன்றே (பொருள்.செய்யு:183:1), கேழல்-கண்ணும் **கடி** வரை இன்றே (பொருள்.மரபு.34:2)

இங்கு கடி என்னும் சொல் வழக்கமான கூர்மை, மணம், காவல், புதுமை, அச்சம், சிறப்பு போன்ற பொருள்களைக் குறிக்கும் உரிச்சொல் பயன்பாட்டிலிருந்து வேறுபட்டு, தடை அல்லது வரையறை என்ற பொருளில் இடம்பெறுகிறது.

கடி சொல் இல்லை காலத்து படினே (சொல்.எச்சம்.935)

கடி மனை நீத்த பாலின்-கண்ணும் (பொருள்.புறம்.21:16)

இங்கு வரும் கடி என்பது விலக்குதல் அல்லது குற்றம் காணுதல் என்ற பொருளைக் கொண்டது

கடி என் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்தேற்றுஆ ஈரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டாகும்மே (சொல்.உரி.866)

இங்கு, இச்சொல்லானது வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்தேற்று ஆகிய பத்து பொருள்களை உணர்த்தும் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்:

நன்னூல்

கடியென் கிளவி காப்பே கூர்மை

விரையே விளக்க மச்சஞ் சிறப்பே

விரைவே மிகுதி புதுமை யார்த்தல்

வரைவே மன்றல் கரிப்பி னாகும் (சொல்:457)

கடி என்ற உரிச்சொல் காப்பு, கூர்மை, விரை, விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு ஆகிய பதின்மூன்று பொருள்களை உணர்த்துவதாகக் கூறப்படுகிறது

புறப்பொருள் வெண்பாமாலை

காஞ்சி சூடி **கடி** மனை **கடி**ந்தின்று (4.2:2) (காவல்), ஆள் **கடி** வெல் களிற்று அண்ணல் கொடுத்து அளித்தான் (4.9:3) (கூர்மை), **கடி** கமழ் வேரி கடை-தொறும் செல்ல (4.51:1) (மணம், நறுமணம்), முற்ற **கடி** அரணம் எல்லாம் முரண் அவிந்த (6.5:3) (காவல், பாதுகாப்பு), கற்பொறியும் பாம்பும் கனலும் **கடி** குரங்கும் (6.37:1) (கடுமை, கொடுமை), உடல் சினத்தார் **கடி** அரணம் (6.38:1) (காவல்), **கடி** முரசம் காலை செய (9.29:4) (மிகுதி), **கடி** படு கொன்றையான் காப்ப நெடிது உலகில் (9.76:2) (மணம், நறுமணம்)

புறப்பொருள் வெண்பாமாலையில் இடம்பெறும் கடி என்ற சொல்லானது காவல், கூர்மை, மணம், கடுமை, காவல், மிகுதி ஆகிய பொருள்களைத் தருவதைக் காணமுடிகின்றது.

சிறுபாணாற்றுப்படை

அந்தணர் அருகா அரும் **கடி** வியல் நகர் (சிறு.187)

இங்கு இடம்பெறுகின்ற கடி என்ற உரிச்சொல் காவல் என்ற பொருளில் எடுத்தாளப்படுகின்றது.

பெரும்பாணாற்றுப்படை

கொடியோர் இன்று அவன் **கடி** உடை வியன் புலம் (பெரும்.41) – காவல், தொடர் நாய் யாத்த துன் அரும் **கடி** நகர் (பெரும்.125) – காவல், கேளா மன்னர் **கடி** புலம் புக்கு (பெரும்.140) – காவல், **கடி** மதில் எறிந்து குடுமி கொள்ளும் (பெரும்.451) – காவல், அரும் **கடி** தீம் சுவை அமுதொடு பிறவும் (பெரும்.475) (சுவையான, மிகுதியான). பெரும்பாணாற்றுப்படையில் இடம்பெறும் கடி என்ற உரிச்சொல் காவல் மற்றும் சுவையான, மிகுதியான என்ற பொருளில் வரப்பெற்றுள்ளது.

முல்லைப்பாட்டு

அரும் **கடி** மூதூர் மருங்கில் போகி (முல். 7)

கடி என்ற உரிச்சொல் காவல் நிறைந்த மூதூர் என்ற பொருளில் வந்துள்ளது.

மதுரைக்காஞ்சி

நெறி அறிந்த **கடி** வாலுவன் (மது.36) – கூர்மை, **கடி** காவின் நிலை தொலைச்சி (மது.153) – காவல், தினை விளை சாரல் கிளி **கடி** பூசல் (மது.291) – காத்தல், விரட்டுதல், அரும் **கடி** மா மலை தழீஇ ஒருசார் (மது.301) – காவல், அரும் **கடி** வேலன் முருகொடு வளைஇ (மது.611) – அச்சம், கடுமை. மதுரைக்காஞ்சியில் இடம்பெறும் இச்சொல் கூர்மை, காவல், காத்தல், அச்சம் ஆகிய பொருளில் வரப்பெற்றுள்ளது.

நெடுநல்வாடை

கடி உடை வியல் நகர் சிறு குறும் தொழுவர் (நெடு.49) – காவல், ஆடவர் குறுகா அரும் **கடி** வரைப்பின் (நெடு.107) – காவல். நெடுநல்வாடையில் கடி என்ற உரிச்சொல் காவல் என்ற பொருளிலே எடுத்தாளப்பட்டுள்ளது.

குறிஞ்சிப்பாட்டு

நெடும் தேர் எந்தை அரும் **கடி** நீவி (குறி.20) – காவல், கிளி **கடி** மரபின ஊழ்ஊழ் வாங்கி (குறி.44) – விரட்டுதல், கரந்தை குளவி **கடி** கமழ் கலி மா (குறி.76) – நறுமணம், ஆரம் காழ்வை **கடி** இரும் புன்னை (குறி.93) – நறுமணம். குறிஞ்சிப்பாட்டில் கடி என்ற சொல் காவல், நறுமணம், விரட்டுதல் ஆகிய பொருளில் வந்துள்ளது.

பட்டினப்பாலை

பூதம் காக்கும் புகல் அரும் **கடி** நகர் (பட்.57) – காவல், அரும் **கடி** பெரும் காப்பின் (பட்.133) – காவல், **கடி** அரண் தொலைத்த கதவு கொல் மருப்பின் (பட்.229) – காவல், பேய் கண் அன்ன பிளிறு **கடி** முரசம் (பட்.236) – கடுமை, அச்சம், அரும் **கடி** வரைப்பின் ஊர் கவின் அழிய (பட்.269) – காவல். பட்டினப்பாலையில் கடி என்ற சொல்லானது காவல், கடுமை, அச்சம் ஆகிய பொருளில் வரப்பெற்றுள்ளதை இவ்வரிகளின் வழியாக அறியமுடிகின்றது.

மலைபடுகடாம்

கடி கவர்பு ஒலிக்கும் வல் வாய் எல்லரி (மலை.10) – கடுமை, நிரை இதழ் குவளை **கடி** வீ தொடினும் (மலை.189) – மணம், கிளி **கடி** மகளிர் விளி படு பூசல் (மலை.329) – விரட்டுதல், அரும் **கடி** வாயில் அயிராது புகு-மின் (மலை.491) - காவல். மலைபடுகடாமில் இடம்பெறும் கடி என்னும் உரிச்சொல்லானது கடுமை, மணம், காவல், விரட்டுதல் ஆகிய பொருளில் எடுத்தாளப்படுகின்றது.

நற்றிணை

இடிப்பு மெய்யது ஒன்று உடைத்தே **கடி** கொள (நற்.23:3) – கடுமை, நெடு நா ஒண் மணி **கடி** மனை இரட்ட (நற்.40:1) – காவல், அறன் இல் அன்னை அரும் **கடி** படுப்ப (நற்.63:6) – கட்டுப்பாடு, உரும் இடை **கடி** இடி கரையும் (நற்.65:8) – வலிமை, எந்தை ஓம்பும் **கடி** உடை வியல் நகர் (நற்.98:8)- அரண், **கடி** உடை வியல் நகர் காவல் நீவியும் (நற்.156:2)- உறுதி, பெறல் அரும்-குரையள் அரும் **கடி** காப்பினள் (நற்.201:2)- கண்காணிப்பு, **கடி** உடை வியல் நகர் கானவர் துஞ்சார் (நற்.255:3)- அரண், பெய்ம் மணல் முற்றம் **கடி** கொண்டு (நற்.268:8)- செம்மை, அரும் **கடி** அயர்ந்தனள் காப்பே எந்தை (நற்.295:4)- காவல், **கடி** உடை வியல் நகர் காண்வர தோன்ற (நற்.305:3)- அரண்., களிறு தொலைத்து உரறும் **கடி** இடி மழை செத்து (நற்.344:10)- கடுமை, **கடி**_பதம் கமழும் கூந்தல் (நற்.346:10)- நறுமணம், அரும் **கடி** படுத்தனை ஆயினும் சிறந்து இவள் (நற்.351:2)- காவல், அரும் **கடி** அன்னை காவல் நீவி (நற்.365:1)- காவல்.

நற்றிணையில் இடம்பெறுகின்ற இச்சொல், கடுமை, காவல், கட்டுப்பாடு, அரண், உறுதி, செம்மை, நறுமணம் ஆகிய பொருளில் வரப்பெற்றுள்ளது.

குறுந்தொகை

கடி உண் கடவுட்கு இட்ட செழும் குரல் (குறு.105:2)- புதிய, **கடி** உடை மரம்-தொறும் படு வலை மாட்டும் (குறு.342:3)- அடர்ந்த. புதிய மற்றும் அடர்ந்த ஆகிய இருபொருளில் கடி என்ற சொல்லின் வருகையினைக் குறுந்தொகை பதிவு செய்துள்ளது.

ஐங்குறுநூறு

அன்னை அரும் **கடி** வந்து நின்றோனே - ஐங்.115:4)- காவல், நல் மனை அரும் **கடி** அயர - ஐங்.292:4)- காவல், **கடி** புகுவனர் போல் மள்ளரும் உடைத்தே - ஐங்.432:3)- அரண். காவல், அரண் ஆகிய இருபொருளில் இங்கு வரப்பெற்றுள்ளது.

பதிற்றுப்பத்து

கடி உடை முழுமுதல் துமிய ஏஎய் (பதி.11:13)- வலிமை, **கடி** மிளை குண்டு கிடங்கின் (பதி.20:17)- அரண், **கடி** மிளை குண்டு கிடங்கின் (பதி.22:24)- காவல், **கடி** மரத்தான் களிறு அணைத்து (பதி.33:3)- வலிமை, கறுத்த தெவ்வர் **கடி** முனை அலற (பதி.39:4)- வலிமை, சுடர் வீ வாகை **கடி** முதல் தடிந்த (பதி.40:15)- வலிமை, **கடி** ஏர் பூட்டுநர் கடுக்கை மலைய (பதி.43:16)- கூர்மை, கிளி **கடி** மேவலர் புறவு-தொறும் நுவல

(பதி.78:6)- விரட்டுதல், எடுத்தேறு ஏய **கடி** புடை அதிரும் (பதி.84:1)- வலிமை, **கடி** மிளை குண்டு கிடங்கின் (பதி.92:12)- காவல்.

வலிமை, அரண், காவல், கூர்மை, விரட்டுதல் ஆகிய பொருளில் கடி என்ற சொல்லானது பதிற்றுப்பத்தில் பயின்று வந்துள்ளது.

பரிபாடல்

கடம்பு அமர் செல்வன் **கடி** நகர் பேண (பரி.8:126)- அரண், **கடி** சுனையுள் குளித்து ஆடுநரும் (பரி.9:61)- குளிர்ந்த, **கடி** மலர் பிண்டி தன் காதில் செரீஇ (பரி.12:88)- நறுமணம், விசும்பு **கடி** விட்டன்று விழவு புனல் ஆங்க (பரி.12:99)- தெளிந்த, **கடி** நகர் சூழ் நுவலுங்கால் (பரி.19:29)- காவல், **கடி** மதில் பெய்யும் பொழுது (பரி.20:107)- வலிமை, களமர் உழவர் **கடி** மறுகு பிறசார் (பரி.23:27)- ஆரவாரம், **கடி** புகு வேரி கதவம் இல் தோட்டி (பரி.23:32)- காவல்.

இங்கு, அரண், குளிர்ந்த, தெளிந்த, காவல், வலிமை, ஆரவாரம் ஆகிய பொருளில் கடி என்ற உரிச்சொல் வந்துள்ளது.

கலித்தொகை

ஆறு **கடி** கொள்ளும் வேறு புலம் படர்ந்து (கலி.21:3)- தடுத்து, புலம் **கடி** கவணையின் பூம் சினை உதிர்க்கும் (கலி.23:2)- காவல், **கடி** மனை காத்து ஓம்ப வல்லுவள்-கொல்லோ (கலி.24:9)- காவல், **கடி** மலர் கமழ் நாற்றம் கங்குல் வந்து அலைத்தரூஉம் (கலி.29:21)- நறுமணம், கயன் அணி பொதும்பருள் **கடி** மலர் தேன் ஊத (கலி.36:6)- நறுமணம், காந்தள் **கடி** கமழும் கண் வாங்கு இரும் சிலம்பின் (கலி.39:16)- நறுமணம், **கடி** சுனை கவினிய காந்தள் அம் குலையினை (கலி.45:2)- குளிர்ந்த, **கடி** மர துருத்திய கமழ் கடாம் திகழ்தரும் (கலி.48:5)- நறுமணம், அரும் **கடி** நீவாமை கூறின் நன்று என (கலி.54:17)- காவல், **கடி** கய தாமரை கமழ் முகை கரை மாவின் (கலி.72:7)- நறுமணம், கண்ணி நீ **கடி** கொண்டார் கனை-தொறும் யாம் அழ (கலி.72:9)- மணம், **கடி** உடை மார்பின் சிறு கண்ணும் உட்காள் (கலி.82:29)- வலிமை, கடவுள் **கடி** நகர்-தோறும் இவனை (கலி.84:6)- காவல், **கடி** அரணம் பாயா நின் கை புனை வேழம் (கலி.86:7)- வலிமை, **கடி** கயம் பாயும் அலந்து (கலி.92:44)- ஆழமான, ஆங்க **கடி** காவில் கால் ஒற்ற ஒல்கி ஒசியா (கலி.92:51)- காவல், தீது இன்று பொலிக என தெய்வ **கடி** அயர்மார் (கலி.105:6)- காவல், கார் எதிர் கலி ஒலி **கடி** இடி உருமின் இயம் கறங்க (கலி.105:24)- வலிமை, கார் ஆர பெய்த **கடி** கொள் வியன் புலத்து (கலி.109:1)- செழிப்பான, **கடி** கொள் இரும் காப்பில் புல் இனத்து ஆயர் (கலி.110:1)- காவல், கொல் ஏற்று சுறவு இனம் **கடி** கொண்ட மருள் மாலை (கலி.123:9)- வலிமை, **கடி** மலர் புன்னை கீழ் காரிகை தோற்றாளை (கலி.135:6)- நறுமணம், மாந்தர் **கடி** கொண்ட கங்குல் கனவினால் (கலி.142:33)- காவல்.

தடுத்து, காவல், நறுமணம், குளிர்ந்த, வலிமை, ஆழமான, செழிப்பான ஆகிய பொருளில் கடி என்ற சொல் வரப்பெற்றுள்ளது.

அகநானூறு

அரும் **கடி** காவலர் சோர்_பதன் ஒற்றி (அகம். 2:14)- காவல், **கடி** உடை நனம் தலை ஈன்று இளைப்பட்ட (அகம். 3:3)- காவல், ஒண் சுடர் நல் இல் அரும் **கடி** நீவி (அகம். 7:8)- காவல், பாழி அன்ன **கடி** உடை வியல் நகர் (அகம். 15:11)- காவல், நெடுமொழி தந்தை அரும் **கடி** நீவி (அகம். 17:7)- காவல், **கடி** கொண்டனளே தோழி பெரும் துறை (அகம். 20:13)- நறுமணம், **கடி** மதில் கதவம் பாய்தலின் தொடி பிளந்து (அகம். 24:11)- வலிமை, அல்கு_பதம் மிகுத்த **கடி** உடை வியல் நகர் (அகம். 49:14)- காவல், அரும் **கடி** படுக்குவள் அறன் இல் யாயே (அகம். 60:15)- காவல், ஆறு **கடி** கொள்ளும் அரும் சுரம் பணை தோள் (அகம். 65:17)- தடுத்து, **கடி** புலம் கவர்ந்த கன்று உடை கொள்ளையர் (அகம். 101:10)- காவல், அரும் **கடி** காப்பின் அஞ்சுவரு மூதூர் (அகம். 114:12)- காவல், கிளி **கடி** பாடலும் ஒழிந்தனள் (அகம். 118:13)- விரட்டுதல், **கடி** நகர் புனைந்து கடவுள் பேணி (அகம். 136:6)- காவல், புது மண மகடூஉ அயினிய **கடி** நகர் (அகம். 141:14)- காவல், அரும் **கடி** காவலர் இகழ்_பதம் நோக்கி (அகம். 162:7)- காவல், மா இரு விசும்பில் **கடி** இடி பயிற்றி (அகம். 175:13)- வலிமை, கிளி **கடி** மகளிரின் விளி பட பயிரும் (அகம். 194:15)- விரட்டுதல், **கடி** மிளை புறவின் பூத்த முல்லையொடு (அகம். 216:10)- காவல், அரும் **கடி** நெடும் தூண் போல யாவரும் (அகம். 220:8)- வலிமை, அரும் **கடி** வியன் நகர் நோக்கி (அகம். 224:17)- காவல், **கடி** மதில் வரைப்பின் ஊணூர் உம்பர் (அகம். 227:18)- வலிமை, **கடி** உடை வியல் நகர் காவல் கண்ணி (அகம். 232)- காவல், **கடி**_மகள் கதுப்பின் நாறி கொடி மிசை (அகம். 244:5)- நறுமணம், அரும் **கடி** அன்னையும் துயில் மறந்தனளே (அகம். 252:14)- காவல், **கடி** மனை மாடத்து கங்குல் வீச (அகம். 255:16)- சிறப்புடைய, நன்னன் உதியன் அரும் **கடி** பாழி (அகம். 258:1)- காவல், பெரும் பெயர் எந்தை அரும் **கடி** நீவி (அகம். 268:12)- காவல், **கடி** இலம் புகூஉம் கள்வன் போல (அகம். 276:4)- காவல், **கடி** உடை வியல் நகர் ஓம்பினள் உறையும் (அகம். 298:16)- காவல், காவலர் கரந்து **கடி** புனம் துழைஇய (அகம். 308:14)- காவல், வனை கழை உடைந்த கவண் விசை **கடி** இடி (அகம். 309:13)- கடுமையான, அரும் **கடி** காப்பின் அகல் நகர் ஒரு சிறை (அகம். 311:2)- காவல், அரும் **கடி** வியல் நகர் சிலம்பும் கழியாள் (அகம். 315:8)- காவல், **கடி** சுனை தெளிந்த மணி மருள் தீம் நீர் (அகம். 368:10)- குளிர்ந்த, அரும் **கடி** படுவலும் என்றி மற்று நீ (அகம். 370:7)- காவல், கல்லா யானை **கடி** புனல் கற்று என (அகம். 376:2)- வலிமை

காவல், நறுமணம், வலிமை, தடுத்து, விரட்டுதல், வலிமை, சிறப்பு, கடுமை, குளிர்ந்த ஆகிய பொருளில் இச்சொல் வரப்பெற்றுள்ளது.

புறநானூறு

எம் அம்பு **கடி** விடுதும் நும் அரண் சேர்-மின் என (புறம்.9:5)- வேகமாக, **கடி** துறை நீர் களிறு படீஇ (புறம்.16:6)- குளிர்ந்த, அம்பு துஞ்சும் **கடி** அரணால் (புறம்.20:16)- வலிமை, கதிர் நுழைகல்லா மரம் பயில் **கடி** மிளை (புறம்.21:5)- காவல், **கடி** மரம் துளங்கிய காவும் நெடு நகர் (புறம்.23:9)- காவல், **கடி** மதில் பாயும் நின் களிறு அடங்கலவே (புறம்.31:8)- வலிமை மிக்க, **கடி** மரம் தடியும் ஓசை தன் ஊர் (புறம்.36:9)- வலிமை, நெடு மதில் வரைப்பின் **கடி** மனை இயம்ப (புறம்.36:10)- காவல், **கடி** மதில் அரண் பல கடந்து (புறம்.92:5)- வலிமை, **கடி** உடை வியன் நகரவ்வே அவ்வே (புறம்.95:3)- காவல், **கடி** மரம்

வருந்த தந்து யாம் பிணித்த (புறம்.162:5)- வலிமை மிக்க, அரும் **கடி** பெரும் காலை (புறம்.166:24)- துன்பம், புலாஅல் அம்பின் போர் அரும் **கடி** மிளை (புறம்.181:5)- காவல், அரும் **கடி** முனை அரண் போல (புறம்.210:14)- காவல், **கடி** காவில் பூ சூடினன் (புறம்.239:2)- நறுமணம், முழுவு கண் துயிலா **கடி** உடை வியன் நகர் (புறம்.247:8)- காவல், **கடி** உடை வியன் நகர் காண்வர பொலிந்த (புறம்.272:4)- காவல், வடி மாண் எஃகம் **கடி** முகத்து ஏந்தி (புறம்.275:5)- வலிமை, நெடு நகர் வரைப்பின் **கடி** நறை Gif, (புறம்.281:6)- நறுமணம், களிறும் **கடி** மரம் சேரா சேர்ந்த (புறம்.336:4)- வலிமை, அன்னோ பெரும் பேது உற்றன்று இ அரும் **கடி** மூதூர் (புறம்.336:7)- காவல், அரும் **கடி** வியன் நகர் குறுகல் வேண்டி (புறம்.383:7)- காவல், கனவினும் குறுகா **கடி** உடை வியன் நகர் (புறம்.390:6)- காவல், நெடும் கை வேண்மான் அரும் **கடி** பிடவூர் (புறம்.395:20)- காவல்.

வேகம், குளிர்ந்த, காவல், வலிமை, துன்பம், நறுமணம் ஆகிய பொருள்நிலைகளில் கடி என்ற உரிச்சொல்லின் வருகையினைப் புறநானூற்றில் காணமுடிகின்றது.

தொகுப்புரை

இலக்கணிகள் சுட்டிய கடி என்ற உரிச்சொல்லின் பொருள் நிலைகளும் சுட்டாத புதிய பொருள் நிலைகளும் சங்க இலக்கியங்களில் பயின்று வருவதை மேற்கண்ட தரவுகளின் வழியாக நன்கு அறியமுடிகின்றது. விரட்டுதல், உறுதி, புதிய, குளிர்ந்த, தெளிந்த, ஆரவாரம், தடுத்தல், ஆழம், செழிப்பான, வேகம், துன்பம் ஆகிய பொருள்நிலைகளிலும் கடி என்ற உரிச்சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் இக்கட்டுரையின் வழியாக அறியமுடிகின்றது.

தமிழ் இலக்கண மரபில் கடி என்பது பல்வேறு பொருள்களை உணர்த்தும் பன்முகப் பொருள் கொண்ட உரிச்சொல் ஆகும். இதன் அடிப்படைப் பொருள் ஒரே நிலையில் நிலைத்திராமல், அது இடம்பெறும் சொல் மற்றும் சூழலைப் பொறுத்து பல்வேறு பொருள் நிழல்களைப் பெறுவதை இத்தரவுகள் உறுதிசெய்கின்றன.

கடி என்பது தனித்து நிற்கும் பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல் போல அல்லாமல், பிற சொற்களுடன் இணைந்து அவற்றின் பண்பை விளக்கும் உரிச்சொல் ஆகப் பயன்படுகிறது. எனவே, கடியின் பொருளைத் தீர்மானிக்கும்போது, அது இணையும் சொல் மற்றும் இடம்பெறும் இலக்கியச் சூழல் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

கடி என்னும் உரிச்சொல் தமிழின் செழுமையான உரிச்சொல் மரபில் பலபொருள் விரிவையும் சூழலுக்கேற்ப பொருள் மாற்றத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான உரிச்சொல்லாக வருவதை அறியமுடிகின்றது. புதியதாக இனம்காணப்பட்டுள்ள இப்பொருள்நிலைகளைப் பிந்திய இலக்கண நூற்களின் உரிச்சொற்களின் கோட்பாட்டின் இணைப்பதும் புதிப்பிப்பதும் காலத்தின் தேவை. காலமாற்றம் மற்றும் வளர்ச்சியினால் இலக்கணக் கூறுகளில் ஏற்படும் இம்மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் பதிவு செய்து பிந்தைய ஆய்வுகளுக்குப் பெரிதும் துணைபுரியும்.

துணைநூற் பட்டியல்

References

அரவிந்தன்.மு.வை, உரையாசிரியர்கள், 2008, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்

இளம்பூரணர் உரை, தொல்காப்பிய பொருளதிகாரம் மூலமும் உரையும், 2010, சென்னை, சாரதா பதிப்பகம்

இளவரசு.சோம, நன்னூல் எழுத்ததிகாரம், 2003, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்

இளவரசு.சோம, நன்னூல் சொல்லதிகாரம், 2003, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்,

சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்

சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்

சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 3, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்

சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி – 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்

சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி – 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்

சுப்ரமணியம்.ச.வே.சு., சங்க இலக்கியம் முழுவதும், 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்

சிற்பி பாலசுப்பிரமணியன், நீலபத்மநாபன், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, புதுதில்லி, சாகித்திய அகாதெமி

சோமசுந்தரனார்.பொ.வே., புறப்பொருள் வெண்பாமாலை, 2002, திருநெல்வேலி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

தமிழண்ணல், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், தொகுதி – 1, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்

தமிழண்ணல், தொல்காப்பியம் சொல்லதிகாரம், தொகுதி – 2, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்

தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி – 3, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்

பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், 2017, சென்னை, அமராவதி பதிப்பகம்